12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2018), மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தை மிகவும் comprehensive ஆகச் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் அவர்களும் இதில் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தனியார் பள்ளிகளில் இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில், NEET தேர்வுக்குப் பிறகு வகுப்பறைகள் (class rooms) என்பது கற்றல் கற்பித்தல் நிகழ்வுகள் (learning process) நடப்பதற்குப் பதிலாக, அவையெல்லாம் coaching classes ஆக நடக்கக்கூடிய ஓர் அபாயகரமான சூழ்நிலையே இன்றைய தேதியில், குறிப்பாக, தனியார் பள்ளிகளில் இருக்கக்கூடிய*

@ 5–7–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

சூழ்நிலை இருக்கிறது. எனவே, அங்கு classes எல்லாம் coaching classes ஆக மாறிவிடாமல், அவற்றையெல்லாம் அந்தந்த வகுப்புக்குரிய பாடங்களை மாணவர்கள் அவர்களுடைய வயதுக்கேற்ப பயிலக்கூடிய வகையில் அங்கு learning process நடைபெறுவதை உறுதி செய்யக்கூடிய வகையில் இந்த ஒட்டுமொத்த சட்டத்தில் அதற்கான விதிகளை நீங்கள் உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரே ஒரு சந்தேகம். ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய Bill–ல் section 9–ல் "No educational agency shall without getting certificate of recognition of a competent authority under section 8 applying for affiliation to the State Board of School Education or any other Board" என்று சொல்லப்பட்டிருக்கிறது. Any other Board என்பது மத்திய இடைநிலைக் கல்வி வாரியமாக இருக்கக்கூடிய Central Board of School Education, அதாவது, CBSE–யையும் அது இணைத்திருக்கிறதா; இனிமேல் CBSE–க்கு இந்த அரசு affiliation கொடுக்க வேண்டிய சூழ்நிலை வந்தால், CBSE–க்காக நடத்தப்படக்கூடிய இந்தப் பள்ளிகள் இனிமேல் தமிழ்நாட்டில் உள்ள சட்ட விதிகளின்படி அவர்கள் recognition பெற வேண்டியது அவசியமாகிறதா என்ற வினாவையும், CBSE விதிமுறைகளில் அதற்கான உரிய திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதையும் நான் இந்த நேரத்தில் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளை இங்கே வைத்திருக்கிறார். ஒன்று, NEET தேர்வுக்காகவே அவர்கள் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறார்கள்; பள்ளி நேரங்களில்கூட வாரத்தில் இரண்டு நாட்கள் NEET தேர்வுக்காகவே மாணவர்களை அழைத்து, பள்ளிக்கு வராமலேயே NEET தேர்வுக்காக பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதை இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். காலையிலே நீங்கள் பத்திரிகைகள் வாயிலாகப் பார்த்திருக்கக்கூடும். அதற்கான உரிய நடவடிக்கையை அரசு மேற்கொண்டு வருகிறது. அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் அதற்கான கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அப்படி யாராவது NEET தேர்வுக்கான பயிற்சி நடத்தினால், அதை விடுமுறை நாட்களிலோ

2018 ஜூலை 5] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

அல்லது பள்ளி நேரம் முடிந்த பிறகோ நடத்தலாமே தவிர, மற்ற நேரங்களில் நடத்தினால் உடனடியாக அந்தப் பள்ளிக்கான உரிமம் மற்றும் NOC withdraw செய்யப்படும் என்று இந்த அரசு கடுமையாகச் சொல்லியிருக்கிறது.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டாவதாக ஒரு சந்தேகத்தை இந்த அவையில் கேட்டிருக்கின்றார்கள். C.B.S.E. பள்ளிகளுக்கும் இது பொருந்துமா என்று கேட்டிருக்கிறார்கள். C.B.S.E. பள்ளிகளைப் பொறுத்தவரையில், மத்திய அரசின் கொள்கைப்படி மாநில அரசு NOC கொடுத்த பிறகு, மத்திய அரசிடம் அங்கீகாரம் பெறுகிறார்கள். அதற்குப் பிறகு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்தப் பள்ளியில் இருக்கின்ற நிலைமைகளை மனதில் கொண்டு, C.B.S.E. பள்ளிகளை நடத்துகின்ற ஒவ்வொருவரும் எப்படி நடத்துகிறார்கள் என்பதை இந்த அரசு கண்காணித்து, மீண்டும் NOC வழங்குவதற்காகப் பரிசீலனை செய்து, மாநில அரசின் ஒப்புதல் பெற்றதற்குப் பிறகுதான் அவர்கள் அந்தப் பள்ளியைத் தொடர்ந்து நடத்த முடியுமே தவிர, இதற்கு முன்னால் இருந்ததைப்போல, ஒரு முறை NOC வாங்கியதற்குப் பிறகு மத்திய அரசின் அங்கீகாரத்தைப் பெற்றாலே அந்தப் பள்ளியைத் தொடர்ந்து நடத்திடலாம் என்ற நிலையில் இருந்துவிட முடியாது. இப்பொழுது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை தமிழக அரசின் ஒப்புதலைப் பெற்றுத்தான் C.B.S.E. பள்ளிகளை நடத்த முடியும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற சந்தேகங்கள் உங்களுக்குத் தேவையில்லை. ஆகவே, அதையும் அரசு ஏற்று, அதுவும் இந்தச் சட்டத்தில் இடம்பெற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4—10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் coaching classes எடுப்பது பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றிதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் முதலில் விரிவாகச் சொன்னேன். அரசுப் பள்ளிகளில் 5 நாட்கள் எப்படிப் பாடம் நடத்தப்படுகிறதோ அதேபோலதான் தனியார் பள்ளிகளிலும் பாடம் நடத்தப்பட வேண்டும். அரசு உதவிபெறும் பள்ளிகளில் எப்படிப் பாடம் நடத்தப்படுகிறதோ, அதுபோலதான் தனியார் பள்ளிகளிலும் பாடம் நடத்தப்பட வேண்டும். ஆகவே, coaching centre என்ற முறையில், தனிப்பட்ட முறையில் அவர்கள் அந்த நாட்களை ஒதுக்காமல், வாரத்தில் 5 நாட்கள் பாடங்கள்

நடத்தப்பெற்று நடைபெறுகிறது என்று சொன்னால், விடுமுறை நாட்களில்தான் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமே தவிர, மற்ற நாட்களில் அவர்கள் பயிற்சி அளிப்பார்களேயானால் அவர்களுக்கு இருக்கிற உரிமைகள் இரத்து செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 60 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 60 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூலை 5]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2018), மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2018)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 5–7–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.